வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே அவை நல்ல வருவாய் தரக்கூடிய மலைத் தோட்டங்களாக இருப்பதால் வரியை ரத்து செய்ய முடியாத நிலை இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : காப்பி, தேயிலை பயிரிடப்படுகின்ற நீலகிரி மாவட்டத்தில் மட்டும்தான் இந்த வரி வசூல் செய்யப்படுகின்றதா? அல்லது இது போன்று காப்பி, தேயிலை சாகுபடி செய்யப்படுகின்ற மற்றப் பகுதிகளில் இந்த வரி வசூலிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எல்லா இடங்களிலுந்தான் வசூலிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தின் மீது எந்தக் கோபமும் அரசாங்கத்திற்குக் கிடையாது.

Elliots Beach at Madras

* 39 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to make the Elliots Beach at Maras City a bathing resort; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. குளிக்கும் வசதிகள் அமைத்தல் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்தப் பகுதியில் பெரும்பாலும் வெளிநாட்டினர்தான் அதிகமாக நீராடுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடத்தை மேலும் நல்ல முறையில் அழகுபடுத்த அரசாங்கத்திடம் விரிவான திட்டம் இருக்கிறதா? எவ்வளவு செலவாகும்? எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது அந்த இடத்தில் வெளிநாட்டினர் மட்டுமல்லாமல் நம்முடைய நகர மக்களில் பெரும்பாலானவர்களும் குளிக்கிறார்கள். அதை விரிவுபடுத்தும் திட்டம் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசு எழுதியிருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நீச்சல் குளம், நீர்ச் சருக்கு விளையாட்டு இவை எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. மத்திய அரசு இன்னும் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. அந்த ஒப்புதல் பெற்ற பிறகே எந்த அளவுக்குப் பணம் செலவாகும் என்று திட்டமாகச் சொல்ல முடியும்.

திரு. கே. விநாயகம் : இந்த எலியட் பீச்சில் குளிக்கப் போகின்றவர்களுக்கு சுறா மீன்களால் அடிக்கடி ஆபத்து ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி வருகின்ற சுறா மீன்களை வராமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

1970 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த இடத்தில் ஆளை விழுங்கும் சுறா மீன்கள் வருவதாகக் குறிப்பில் இல்லை. சாப்பிடக் கூடிய சுறா மீன்கள்தான் வருவதாகத் தெரிகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பழத்தோட்டம்

*40 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழமரத் தோட்டம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசினரின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பழத் தோட்டம் செடிப்பண்ணை ஒன்றை அமைப்பதற்கான தகுந்த இடம் ஒன்று கிடைக்கப்பெறவில்லை. ஆயினும், இப்பழத் தோட்டத்தை அமைக்க, குடுமியாமலையில் உள்ள மாநில விதைப் பண்ணையில் ஒரு பகுதி நிலத்தை ஒதுக்குவது குறித்து வேளாண்மை இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: குடுமியாமலை தவிர வேறு புஞ்சைப் பகுதிகளில் இந்தப் பழத் தோட்டத்தை அமைக்க ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: திருச்சியில் மாகாளிப்பட்டி என்ற இடத்தில் இதை அமைக்க முதலில் திட்டமிடப்பட்டது. பின்னர் திருச்சியில் மத்தியப் பகுதியில் காட்டு நிலங்களில் அமைப்பது என்று திட்டமிடப்பட்டது. ஆனால் விவசாய ஆராய்ச்சி வல்லுநர்கள் அந்த இடங்கள் தகுதியானவை அல்ல என்று முடிவு செய்த காரணத்தால் அங்கே வைப்பது கைவிடப்பட்டு குடுமியாமலையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா: திருச்சி மாவட்டத்தில் குடுமியாமலைப் பகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் போலவே அரியலூர் பகுதியிலும் மிகுதியான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் பழத் தோட்டம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சி நிறுவனத்தால் மண் வளத்தைப் பார்த்து அந்த இடங்களை எல்லாம் அங்கீகாரம் செய்யவில்லை.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Agriculture the areas which are having suitable climatic conditions to start orchards in our State and areas where orchards had been started?